சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **155 / 2019**

பெயர்: கலியபெருமாள் பி.வா.சா. 1 தேதி **04.03.2026**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் அதனை படித்து பார்த்து தான் பதில் வழக்குரை தாக்கல் செய்தேன். நான் M.com.,B.Ed., படித்துள்ளேன். மேற்படி நான் தனியார் பள்ளியில் பணிபுரிவதற்கு வசதியாக தரகம்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் அந்த காரணத்திற்காக தரகம்பட்டியில் வசிக்கவில்லை. வழக்கு சொத்து தரகம்பட்டியில் இருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தள்ளி உள்ளது என்றால் சரிதான். மேற்படி தரகம்பட்டியில் நான் வசித்து வந்தததால் தாவா சொத்தை முழுவதையும் வாதி தான் அனுபவம் செய்துவந்தார் என்றால் வாதி தான் அனுபவம் செய்துவந்தார். தாவா சொத்தானது எனக்கும், எனது தம்பிக்கும் எப்படி பாத்தியம் என்றால் எனது தகப்பனார் இருவர் பெயரிலும் வாங்கி கொடுத்த சொத்து. மேற்படி சொத்து எங்கள் இருவருக்கும் மட்டும் பாத்தியம் என்றால் நான் அவ்வாறு தான் நினைக்கிறேன். மேற்படி சொத்தை நான் விற்க நேரிடும்பட்சத்தில் வாதிக்கு தான் விற்கவேண்டும் என்றால் விற்கவேண்டிய அவசியம் இல்லை. நான் மேற்படி சொத்தை விற்பனை செய்வதற்கு முன்னர் வாதியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன்.

2. நான் மேற்படி சொத்தை ரூ.3,00,000/- சொன்னேன் எனது தம்பி ரூ.50,000/-த்திற்கு கேட்டார் விலை கட்டுபடியாகவில்லை என்பதால் நான் மூன்றாவது நபருக்கு விற்றுவிட்டேன். எனக்கு 6 ஏக்கர் 87 செண்ட் பங்கு உண்டு. வாய்மொழியாக பாகம் ஏற்பட்டபொழுது யாராவது இருந்தார்களா என்றால் எனது அப்பா, அம்மா, வாதியும் இருந்தார்கள். வாய்மொழியாக எங்களுக்குள் பாகம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எங்களுக்குள் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அனுபவம் செய்துவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனக்கும், வாதிக்கு வாய்மொழியாக பாகம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் பி.வா.சா-ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணம் எனது மனைவியால் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட ஆவணம். மேற்படி ஆவணத்தில் கிரைய தொகை எவ்வளவு என்றால் ரூ. 4,50,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேற்படி பி.வா.சா-ஆ.2 ஆவணத்தின் படி பாக்கி தொகை ரூ.4,00,000/- கொடுக்க வேண்டியுள்ளது என்றால் சரிதான். வெறும் ரூ.50,000/-த்தை மட்டும் வாங்கிக்கொண்டுமேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை மூன்றாவது பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய அவசியம் என்னவென்றால் பிரச்சனை எதுவும் இருக்காது என்று நினைத்தேன். எனது தம்பியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக தான் வெறும் ரூ.50,000/- மட்டும் பெற்றுக்கொண்டு பெயரளவில் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எனது தம்பியின் பங்கு அவருக்கு கிடைக்கக்கூடாது என்பதற்காக பி.வா.சா.ஆ.1, 2 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. மூன்றாவது பிரதிவாதி கொடுத்த ரூ.50,000/- த்தை உரிய வட்டியுன் வாதி செலுத்த தயாராக உள்ளதாகவும், மேலும் மீதி கிரைய தொகையை கொடுக்க தயாராக உள்ளதாகவும், மேற்படி கிரையத்தை வாதிக்கு செய்து கொடுக்கவேண்டும் என்றாலும் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.04 17:18:30 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.